புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2021** **21 ஜனவரி 2023**

## பத்திரிகை செய்தி

புதுச்சேரி, காந்திநகர் செவன்த் டே அட்வன்டிஸ்ட் மேல்நிலைப் பள்ளியின் பொன்விழா ஆண்டு கொண்டாட்டம் பட்டானூர் சங்கமித்ரா கலாச்சார மையத்தில் இன்று(22-01-2023) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்து கொண்டு பொன்விழா ஆண்டு கல்வெட்டை திறந்து வைத்து உரையாற்றினார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ஏ.கே.டி. ஆறுமுகம், திரு கே.எஸ்.பி. ரமேஷ், மாவட்ட ஆட்சியர் திரு வல்லவன், செவன்த் டே அட்வன்டிஸ்ட் தென்னிந்திய சங்கத்தின் தலைவர் திரு டேனியல் தேவதாஸ், செயலாளர் திரு ஜீவா பொன்னப்பா, பள்ளி முதல்வர் திரு சுகுமார், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் திரளான மாணவர்கள் விழாவில் கலந்து கொண்டனர். விழாவில் பேசிய துணை ஆளுநர் ஆற்றிய உரையின் சுருக்கம்.

- மாணவர்கள் ஆசிரியர்கள் பெற்றோர்கள் அதிகாரிகள் என்று பக்கபலமாக உள்ள அனைவரும் விடுமுறை நாளிலும் விழாவிற்கு வந்திருப்பது இந்த பள்ளி சிறப்பாக செயல்படுவது என்பதற்கு ஆதாரம்.
- என்னைப் போன்றவர்கள் இந்த மேடையில் நின்று கொண்டிருப்பதற்கு காரணம் ஆசிரியர் பெருமக்கள்தான். நாங்கள் ஆசிரியர் பெருமக்களின் அறிவுரையோடு வந்தவர்கள்.
- இன்றைய மாணவ-மாணவிகளுக்கு நான் சொல்லிக் கொள்வதெல்லாம் நாம் தன்னம்பிக்கையோடு வளர வேண்டும். குழந்தைகள் என்பவர்கள் பட்டாம்பூச்சிகளைப் போல பறக்க வேண்டும். மகிழ்ச்சியாக கல்வியை கற்க வேண்டும்.
- அதே நேரத்தில் சவால்களை எதிர்கொள்ளும் அளவிற்கு அவர்களுக்கு பெரியவர்கள் பயிற்சி அளிக்க வேண்டும். அவர்கள் மீது அதிகமாக கவனம் செலுத்துவதாக அவர்களை இயல்பாக நடக்க விடுவது கிடையாது. குழந்தைகளை இயல்பாக இருக்க விடுங்கள். அதுதான் முக்கியம். அவர்கள் அறிவாளிகள். இன்றைய மாணவ மாணவிகள் நம்மை விட அறிவாளிகளாக இருக்கிறார்கள் என்பதை ஒத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் அறிவாளிகளாக இருப்பதால் அவர்களை கையாளுவதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

- குழந்தைகளுக்கு அதிகம் செல்லம் தருவதால் அவர்கள் சவால்களை எதிர்கொள்ள முடிவதில்லை. எந்த பிரச்சினை வந்தாலும் அதை எதிர் கொள்ளும் அளவிற்கு குழந்தைகளை வளர்க்க வேண்டும். சில குழந்தைகளிடம் அந்த மன தைரியம் இல்லை. அதனால் தான் தற்கொலை போன்ற முடிவுக்கு செல்கிறார்கள். மாணவர்களுக்கு வேண்டியதை சரியான நேரத்தில் சரியானபடி சொல்லிக் கொடுக்க வேண்டும்.
- குழந்தைகள் சத்தான உணவை சாப்பிடுகிறார்களா என்பதை தாய்மார்கள் உறுதி செய்ய வேண்டும். குழந்தைகளை நன்றாக சாப்பிட வைக்க வேண்டும். தண்ணீர் அருந்த வைக்க வேண்டும். வாரத்திற்கு மூன்று முறை உணவில் முட்டை தர வேண்டும். கழிப்பறைகளை சுத்தமாக வைத்து பயன்படுத்த கற்றுத் தர வேண்டும். இதுவே அவர்களுக்கு ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்கி தரும்.
- குழந்தைகள் இளம் பருவத்தில் இருந்தே யோகா கற்றுக்கொள்ளுங்கள். பாரதப் பிரதமர் எழுதிய “எக்ஸாம் வாரியர்ஸ்” என்ற புத்தகத்தை அண்மையில் வெளியிட்டேன். அந்த புத்தகத்தில் தேர்வுகளை மகிழ்ச்சியாக எதிர்கொள்ளுங்கள் ஒரு விழா போல எதிர்கொள்ளுங்கள் என்று பாரதப் பிரதமர் எழுதி இருக்கிறார். குழந்தைகள் பள்ளி பருவத்தை மகிழ்ச்சியாக கொண்டாட வைக்க வேண்டும் என்பதுதான் நம் அனைவரின் கடமையாக இருக்க முடியும்.
- எதிர்ப்புகளை எதிர்கொள்ளும் அளவிற்கு பழக்குங்கள். தட்டிக் கொடுத்து வளர்க்க வேண்டும். கண்டிப்பு வளர்ப்பதைவிட கண்காணித்து வளர்க்க வேண்டும். அன்பால் திருத்தி நல்ல வழிக்கு கொண்டுவர வேண்டும். குழந்தைகளுக்கு அறிவாற்றல் அதிகம். அவர்கள் 8 வயது வரை அவர்களுடைய மூளை எதையும் கிரகித்துக் கொள்ளும். அதற்கான விஷயங்களை நாம் தருகிறோமா என்றால் இல்லை.
- அதிகம் புத்தகங்களை படிக்க பழக்க வேண்டும். சிறுசிறு கதை புத்தகங்கள், சுதந்திரப் போராட்ட வீரர்கள் பற்றிய புத்தகங்கள், அன்றைய பாடம் இவற்றை குழந்தைகள் அன்றே படிக்க வேண்டும். உறுதியான உடல் நலம் உள்ளவர்களாக ஆரோக்கியமானவர்களான குழந்தைகளை வளர்க்க வேண்டும்.